[1982 மார்ச் 12

நகர்ப்புற உச்சவரம்புச் சட்டம் மூலம் அரசால் கைப்பற்றப்பட்ட நிலங்கள்

***வினா எண் 444—திரு. த. வேணுகோபால்** : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர்ப்புற உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் அரசு இதுவரை கைப்பற்றியுள்ள நிலத்தின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 106 இனங்களிலே 386 ஏக்கர் இதுவரைக்கும் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய பதிலில் இதுவரைக்கும் கைப்பற்றி இருக்கக்கூடிய இடங்களின் விஸ்தீரணம் மிகவும் குறைவாக இருக்கிறது. எவ்வளவு சர்ப்பிளஸ்சாக இருக்குமென்று அரசு ஏதாவது எஸ்டிமேட் வைத்திருக்கிறதா? இரண்டாவது நகர்ப்புறங்களில் எடுத்திருக்கிற இந்த நிலங்களை அரசு எந்த பர்ப்பசிற்காக யூஸ் பண்ணுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் சேலம் , திருநெல்வேலி போன்ற சில நகரங்களிலே மட்டும் தான் இன்றைக்கு உச்ச வரம்பு இருக்கிறது. குறைவாக இருப்பதற்கு இதுதான் காரணம். எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் முதலில் அரசினுடைய தேவையென்றால் அதற்கு பயன்படுத்துகிறோம். அதற்குப் பிறகு அரசினுடைய நிறுவனங்கள் அதாவது பப்ளிக் செக்ட்டார், அதற்குப் பிறகு மருத்துவ மனைகள் போன்றவற்றிற்கு கொடுக்கிறோம் பிறகு ஒப்பன் ஆக்ஷனில் போட்டு கொடுக்கிறோம். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கைப்பற்றி இருக்கிற நிலங்கள் தவிர வேறு நிலங்கள் எடுக்க வேண்டிய நிலங்கள் அந்த நகரங்களில் இல்லையா? அப்படி இருந்து எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் இருக்கிறதா? அடுத்து எடுக்கப்பட்ட நிலங்களை நகரங்களில் வீடு இல்லாதவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

1982 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரைக்கும் எடுக்கப்பட்ட நிலம் தான் தெரிவித்தேன். யாருடைய நிலங்களையும் எடுக்காமல் இருப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், தெரிவித்தால் அதைத் திருத்திக் கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கிற போது இது வரையில் கைப்பற்றிய நிலங்கள் என்று சொன்னார்கள், அதற்குப் பின்னால் பதில் சொல்கிற போது இனிமேல் எடுக்கப்படாமல் இருப்பதற்கு எந்த விதமான காரணமும் இல்லையென்று சொன்னால் கைப்பற்ற வேண்டிய நிலம் இவ்வளவுதானா? வேறு யாரிடமும் அதிகமான நிலம் இல்லையா? அதிகமான நிலங்கள் வைத்திருக்கிறவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் இருக்கிறார்களே, இந்த நிலையில் இன்னும் முனைப்புடன் ஆராய்ந்து அதிகமான நிலங்களைக் கையகப்படுத்த அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச வரம்புச் சட்டம் வந்த பிறகு யார் யார் நிலம் வைத்திருக்கிறார்களோ அவர்கள் ஒரு டிக்ளரேஷன் கொடுக்க வேண்டும். அதை வைத்துக் கொண்டு ஒன்றின் பின் ஒன்றாக அரசு முடிவெடுக்கிறது. தப்பிக்கும் வரையில் தப்பித்துக் கொள்ளலாம் என்று சில பேர்கள் கொடுக்காமலும் இருக்ககூடும். அவைகளைக் கண்டுபிடிப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்யும். தொழிற்சாலைகளுக்கு உதவிகரமாக இருக்க வேண்டுமென்று நீங்களே சட்டமன்ற உறுப்பினர்களே சொல்கிறீர்கள். அவர்கள் உச்ச வரம்புச் சட்டத்தின்படி எவ்வளவு நிலம் வைத்துக் கொள்ளலாமோ அதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் நிலங்களை வைத்து தொழிலை விருத்தி செய்யப்போகிறோம் என்று. அப்படி சொன்னால் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள், வேண்டிய வசதி இருக்கிறதா என்கிற விவரங்களை எல்லாம் வாங்கி, அது சரிதானா என்று பார்த்து அதற்குப் பிறகு அவர்கள் அதை இரண்டு வருடத்திற்குள் செய்ய வேண்டும். ஆறு மாதங்களுக்கொரு முறை இன்னென்ன செய்திருக்கிறோம் என்று புரோக்கிரஸ் ரிப்போர்ட் கொடுக்க வேண்டும், என்று சொல்லி கொடுத்து வருகிறோம்.

(முற்பகல் 9—10)

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சேலம், மதுரை, கோவை போன்ற மாவட்டத் தலைநகரங்களிலே மட்டும்தான் எடுக்கப்பட்

டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் போன்று தாலுகா தலைநகர்களிலும் சில பேர்கள் பினாமியாக அதிகப்படியான நிலங்களை வைத்திருக்கிறார்கள். ஆகவே, தாலுகா மட்டத்திலேயும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா? இல்லையெனில எதிர்காலத்திலாவது அப்படிச் செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தாலுகா பக்கம் உச்ச வரம்புச் சட்டமே இல்லை. தாலுக்காவிலே யார் எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி நெல்லை ஆகிய இடங்களிலே தான் இந்தச் சட்டத்தை வைத்திருக்கிறோம். நடைமுறையிலே அமுல் படுத்திக் கொண்டிருக்கிறோம். மற்ற நகரங்களுக்கு இதை நீட்டிப்பது பற்றி யோசிக்கப்படும். தாலுக்காகளுக்கு நிச்சயமாக வராது.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, கோவை மா நகரிலே மில்கள் பல அதிகமாக உள்ள இடம். நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டத்தால் தொழில் வளர்ச்சி பலமாக பாதிக்கப் பட்டிருக்கிறது என்பது அமைச்சருடைய மேலான கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்து நகர்ப்புற நில உச்சவரம்பின் மூலமாக எடுக்கப்பட்ட நிலங்கள் நகர்ப்புறங்களிலே வெறுமனே கிடக்கிறது என்பதையும் அதனால சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன என்பதையும் வீட்டு வசதி.வாரியம் என்ற ஒரு வாரியம் ஏழை நடுத்தர விவசாயிகளிடமிருந்து நிலங்களை எடுத்து வீட்டு வசதி வாரியத்தில் வீடுகள் கட்டுவதற்குப் பதிலாக அரசு நகர்ப்புற உச்ச வரம்பு சட்டத்தினால் கையகப்படுத்தப்பட்ட இடங்களை வீட்டு வசதி வாரியத்திடம் கொடுத்து வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கேள்வியினுடைய இரண்டாவது பகுதிககு முதலில் பதில் சொல்கிறேன். வீட்டு வசதி வாரியத்திற்கு அந்த நிலம் கொடுத்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கோயம்புத்தூரில் மட்டுமல்ல, இந்த ஆறு நகரங்களிலேயும் தொழிற்சாலைகளை உணமையாக அந்த இடங்களில் அபிவிருத்தி செய்யவும் பெரிதாக கட்ட வேண்டுமென்றும் சொல்லுகிற போது அவர்கள் மனுக்கள் கொடுத்தால் ஆராய்ந்து ஆன் கண்டிஷன் கொடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.